# கள்ளக்குறிச்சி நகராட்சி

**2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆம் 31.08.2021 தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

பொருள் எண் 01

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான குப்பை கிடங்கில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இக்கட்டடத்தில் தற்பொழுது இங்குள்ள குப்பைகளை Bio Mining முறையில் பிரித்து இடத்தினை மீளப்பெறும் பணிக்கு இக்கட்டடத்தில் 100 HP மின் இணைப்பு உள்ளது. மேற்படி கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மழைநீர் உட்புகுவதால் மின் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்திடவும், எதிர்வரும் மழைக்காலங்களில் மேலும் பாதிக்கப்படுவதினை தடுத்திடவும் இக்கட்டடத்தினை மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, துருகம் சாலை குப்பை கிடங்கில் உள்ள பழுதடைந்த கட்டடத்தினை மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 4,80,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

பொருள் எண் 02

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் சாலையில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான குப்பை கிடங்கில் தற்பொழுது Bio Mining முறையில் 26621 க.மீ. அளவுள்ள குப்பைகளை பிரித்து இடத்தினை மீளப்பெறும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை தவிர இந்நகராட்சியால் கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் சேகரமாகியுள்ள சுமார் 3000 க.மீ. அளவுள்ள குப்பைகள் மேற்படி பகுதியில் தேங்கியுள்ளது. இதனால் அருகில் உள்ள ஆற்றில் இதன் கழிவு கலக்கும் அபாயம் உள்ளது. எனவே, இக்கழிவுகளை முறையாக பிரித்து இடத்தினை சமன் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, துருகம் சாலை குப்பை கிடங்கிற்கு அருகில் சேகரமாகியுள்ள சுமார் 3000 க.மீ. அளவுள்ள குப்பைகளை முறையாக பிரித்து இடத்தினை சமன் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 06, வாய்க்கால் மேட்டுத் தெரு பகுதியில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலையில், இந்நகராட்சியின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் பழுதுகளாலும், சிறுபாலங்களில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றும் பணிகளின் பொழுதும், மேற்படி சிமெண்ட் சாலையினை உடைத்து பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் மேற்படி சிமெண்ட் சாலையில் ஆங்காங்கே பள்ளங்கள் ஏற்பட்டு பொதுமக்களும், போக்குவரத்திற்கும் பயனற்ற நிலையில் உள்ளது. மேற்படி சாலையினை மராமத்து பணிகளான ஒட்டுப்பணிகள் (Patch Work) மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, வாய்க்கால் மேட்டுத் தெரு சிமெண்ட் சாலையில் ஒட்டுப்பணிகள் (Patch Work) மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்ம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 04**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு ஆர்.செந்தமிழ்செல்வன் என்பவர் கடந்த முதல் வழங்கப்பட்ட ஊதியம் வித்தியாசம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் தொடர்ந்துள்ளார். அதனை தொடர்ந்து வரப்பெற்ற இறுதி வழக்கு தீர்ப்புரையில் தூய்மை பணியாளர் திரு ஆர்.செந்தமிழ்செல்வன் என்பவருக்கு வழங்கப்பட்ட ஊதியத்தினை மறு நிர்ணயம் செய்து வழங்கி அதன் அறிக்கையினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அன்னாரின் ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் நிலுவை ஊதியம் ரூ. ஆகும். மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மறு நிர்ணயம் செய்யப்பட்ட நிலுவை ஊதியத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் சி1/ /2021

**பொருள் எண் 05**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA Ace SKY Lift Ladder வாகனம் எண். TN 15 W 0158ன் தரச்சான்று (F.C.) ............................... தேதியுடன் முடிவடைகிறது. மேலும், வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்திடவும் மேற்படி பணிகளை மேற்கொண்டால் மட்டுமே தெருமின் விளக்கு வாகனத்தினை தடையின்றி இயக்கிட இயலும் என்பதால், மேற்படி வாகனத்தின் தரச்சான்று பெறவும், வாகனத்தில் உள்ள பழுதுகளை முற்றிலும் சரி செய்திட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, தெருமின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA Ace SKY Lift Ladder-க்கு தரச்சான்று பெறுவதற்கும், வாகனத்தில் உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்திடவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்ம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

பொருள் எண் 06

மத்திய அரசின் திட்டமான, அனைத்து அரசு அலுவலகங்களிலும் சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி (Solar Roof Top) செய்து அதனை பயன்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்யுள்ளது. மேற்படி சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்து பயன்படுத்திடவும், மின் கட்டண அளவினை குறைத்திடும் வகையில் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டடத்தின் மேற்கூரையில் சூரிய ஒளி தகடுகள் அமைத்து மின்சாரம் பெறப்பட வேண்டியது அவசியமாகிறது. மேற்படி சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறும் திட்டத்தில் இந்நகராட்சியில் உள்ள மின் சாதனங்களான, கணனிகள், மின் விளக்குகள், மின் விசிறிகள் மற்றும் இதர மின் சாதனங்களுக்கு தேவையான மின்சாரத்திற்கு UPS with Batteryகள் மூலம் சேமித்து 10 KVA என்ற அளவில் (தோராயமாக) 1 அமைப்பு (Solar Panel + UPS + Batteries) உருவாக்கிடவும், அதற்காக ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8,65,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 07**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டடத்தின் மேற்கூரையில் தற்போது அருகில் உள்ள மரங்களின் காய்ந்த இலைகள் விழுந்து மழைநீர் குழாய்களில் புகுந்துவிடுதால், மேற்படி கட்டத்தின் கூரையில் மழைநீர் தேங்கி கட்டடத்தின் மேற்கூரை பாதிப்படைய வாய்ப்புள்ளது. மேலும், இக்கட்டடத்தின் மேற்புறம் செல்வதற்கென்று படிகட்டுகளோ, ஏணிகளோ ஏதும் இல்லாத நிலையில், இக்கட்டடத்தின் மேற்புறம் உள்ள குடிநீர் தொட்டியினை சுத்தம் செய்து போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே, இந்நகராட்சி அலுவலக கட்டடத்தின் மேல் தளத்திற்கு செல்லும் வகையில் 2 எண்ணிக்கையில் இரும்பு ஏணிகள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மேலும், நகராட்சி அலுவலக முகப்பில் உயர் அலுவலர்கள், ஆணையாளர், பொறியாளர் மற்றும் இதர அலுவலர்களின் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் இந்நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் அவர்களது வாகனங்களை நிறுத்தி செல்வதால், அதிக அளவில் இடையூறுகள் ஏற்பட்டு அலுவலர்களின் வாகனங்களை நிறுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தடுக்கும் விதமாக நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் எளிய கதவு கேட் (Check Post Model) அமைத்திட வேண்டியதும் மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2 எண்ணிக்கை இரும்பு ஏணிகள் மற்றும் எளிய கதவு கேட் (Check Post Model) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 02, வ.உ.சி. நகர் 7-வது தெருவில் 6 மற்றும் 9-வது குறுக்குத் தெருக்கள் மண் சாலையாகவே உள்ளது. மேற்படி சாலையில் அதிக அளவில் குடியிருப்புகள் அமையப்பெற்றுள்ளது. ஆனால் நாளது வரையில் மேற்படி சாலையில் மழைநீர் வடிகால் இல்லாமல் உள்ளதால், மழைக்காலங்களில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொதுமக்கள் நடந்து செல்ல இயலாத நிலையிலும், வாகன போக்குவரத்தும் செல்ல இயலாத நிலையில் உள்ளது. மேலும், மழைநீர் செல்ல இயலாத நிலையில் மழைநீர் தேங்குவதால் பொது சுகாதார கேடு ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே, மேற்படி மண் சாலையினை வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலையாக மாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, வ.உ.சி. நகர் 7–வது தெருவில் 6 மற்றும் 7–வது குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 7,75,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 09**

கள்ளக்குறிச்சி நகராட்சி பேருந்து நிலையம் இந்நகரின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தில் 29 எண்ணிக்கை பஸ் நிறுத்தங்களுடன் 'B' Class வகையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்கு தினசரி சுமார் 450–க்கும் மேற்பட்ட பேருந்துகள், 20000–க்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

மேற்படி பேருந்து நிலையத்தின் வருடாந்திர உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதால், இதற்காக வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்களிடம் வருடாந்திர உரிமத்தினை கோரப்பட்ட நிலையில், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்களால் ஆய்வு செய்து, பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறை மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அறைகளை சரிசெய்து வர்ணம் பூசிடவும், பயணிகள் காத்திருப்பு அறையில் தேவையான நாற்காலிகள், மின் விளக்குகள், மின் விசிறிகள் மற்றும் இதர மின் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்து வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்திடும் வகையில் அப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 1,60,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 10**

தமிழக அரசு புதியதாக தலைமை ஏற்று 100 நாட்கள் முடிவு பெற்றுள்ளதை தொடர்ந்து 100 நாட்கள் சாதனை மலர் வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி தொடர்பான நடைபெற்று வரும் பணிகள் குறித்து விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)–க்கு நிர்வாக அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. விளம்பரம் வெளியிட மேற்கொள்ளப்பட்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/1494/2021

**பொருள் எண் 11**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களன் கடிதம் ந.க.எண் 19829/2021/UGSS–1 நாள் 28.08.2021இல் கள்ளக்குறிச்சி நகரில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும், நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், சிறுபாலங்கள், தெருக்கள், குடிநீர் விநியோக குழாய்கள், குடியிருப்பு குடிநீர் குழாய்கள் ஆகியவற்றை GIS Mapping செய்து ஒப்படைக்க வேண்டியுள்ளது. எனவே இவற்றை Drone கொண்டு அளவீடு செய்து, முழு கட்டமைப்புகளை GIS Mapping செய்ய தனியர் Consultancy மூலம் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம்ரூ.9,00,000/–(ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/2020/2021

**பொருள் எண் 12**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் மற்றும் குடிநீர் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 17.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | அம்மா உணவகத்தில் மேம்பாட்டு பணிகள் செய்தல் | ரூ. 2,50,000 | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.50% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s சுபம் கஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.25% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கள்ளக்குறிச்சி நகராட்சி குடிநீர் பணிக்கு திரவ குளோரினேஷன் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000 | M/s Tamilnadu Chemicals, திருமுல்லைவாயல் சென்னை | 0.31% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s Sruthi Alum Industry, Abattur, Chennai | 3.13% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | அண்ணாநகர் தென்கீரனூர் பிரதான சாலை கடைசி சிமெண்ட் தளம் அமைத்தல் | ரூ. 4,50,000 | M/s ஸ்ரீ சுபம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.07% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.07% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

பொருள் எண் 13

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு ……………………….2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கணினிகளுக்கு இணைய இணைப்புகள், UPS மின் இணைப்புகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கைளை மாற்றி அமைத்தல் | ரூ. 2,00,000 | M/s. ஆதவ் சொலியுஷன், விழுப்புரம் | ரூ. 1,74,965/– 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. அகல்யா இன்போடெக், விழுப்புரம் | ரூ. 1,77,150/– 1.10% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. ராம்ஜி இன்போஸிஸ், விழுப்புரம் | ரூ. 1,80,250/– 2.87% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 0.15% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஆதவ் சொலியுஷன், விழுப்புரம் என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / பி1)**

பொருள் எண் 14

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் இயங்கி வரும் மின்கல ஊர்தி (BOV) 17 வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் **09.08.2021** அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளைமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Items | Shri vaari Enterprises, Perugudi | JSS Enterprises, Vaniyambadi | Shree Bhairava green lines, Jolarpet |
|---|---|---|---|---|
| 1 | Differential | 12154.00 | 12518.62 | **11800.00** |
| 2 | Motor | 10248.49 | 10555.94 | **9949.99** |
| 3 | Controller | 9115.50 | 9388.97 | **8850.00** |
| 4 | Battery | 7055.50 | 7267.17 | **6850.00** |
| 5 | Meter | 2317.49 | 2387.01 | **2249.99** |
| 6 | Wiring Kit | 2883.99 | 2970.51 | **2799.99** |
| 7 | Throttle | 978.49 | 1007.84 | **949.99** |
| 8 | Key Set | 288.39 | 297.04 | **279.99** |
| 9 | Right Side Switch | 875.49 | 901.75 | **849.99** |
| 10 | Left Side Switch | 772.49 | 795.66 | **749.99** |
| 11 | Head Lamp | 1009.40 | 1039.68 | **980.00** |
| 12 | DC to DC Converter | 1250.00 | 1300.00 | **1200.00** |
| 13 | MCB | 463.49 | 477.39 | **449.99** |
| 14 | Brake Shoe | 669.49 | 689.57 | **649.99** |
| 15 | RIM | 2162.99 | 2227.88 | **2099.99** |
| 16 | Axel ROD | 288.39 | 297.04 | **279.99** |
| 17 | Fork 43 mm | 3090.00 | 3182.70 | **3000.00** |
| 18 | T Stem 43 mm | 3090.00 | 3182.70 | **3000.00** |
| 19 | Labour | 3605.00 | 3713.15 | **3500.00** |
|  | Total | 62318.59 | 64200.62 | **60489.89** |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்தவிலைப்புள்ளிகொடுத்துள்ளM/s.**Shree Bhairava green lines, Jolarpet**என்றநிறுவனத்தின் விலைப்புள்ளியைஏற்றுபணிஉத்தரவுவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3.இச்செலவினத்தை நகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 1583 /2021/எச்1)**

**பொருள் எண் 15**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மின்கல ஊர்தி (BOV) 27 வாகனத்திற்கு தேவையான டயர்கள் மற்றும் டியூப்கள் ஆகியவை கொள்முதல் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவச ரஅவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 09.08.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Items | Shri vaari Enterprises, Perugudi | JSS Enterprises, Vaniyambadi | Shree Bhairava green lines, Jolarpet |
|---|---|---|---|---|
| 1 | Tyre | 1905.50 | 1962.67 | **1850.00** |
| 2 | Tube | 463.50 | 477.41 | **450.00** |
| | TOTAL | 2369.00 | 2440.08 | **2300.00** |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்தவிலைப்புள்ளிகொடுத்துள்ளM/s.**Shree Bhairava green lines, Jolarpet**என்றநிறுவனத்தின் விலைப்புள்ளியைஏற்றுபணிஉத்தரவுவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1584 /2021/எச்1)**

**பொருள் எண் 16**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் இயங்கி வரும் மின்கல ஊர்தி (BOV) 27 வாகனத்திற்கு தேவையான சார்ஜர்கள் ஆகியவை கொள்முதல செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 09.08.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Items | Shri vaari Enterprises, Perugudi | JSS Enterprises, Vaniyambadi | Shree Bhairava green lines, Jolarpet |
|---|---|---|---|---|
| 1 | Charger | **5974.00** | **6153.00** | **5800.00** |
| | TOTAL | **5974.00** | **6153.00** | **5800.00** |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்தவிலைப்புள்ளிகொடுத்துள்ளM/s.**Shree Bhairava green lines, Jolarpet**என்றநிறுவனத்தின் விலைப்புள்ளியைஏற்றுபணிஉத்தரவுவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1585 /2021/எச்1)**

**பொருள் எண் 17**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி காய்கறி மார்க்கட் பகுதியில் 240 கடைகள் உள்ளன. அதில் மளிகை பொருட்கள் விற்பனை, காய்கறிகள் மற்றும் பொது மக்களுக்கு தினசரி பயன்படும் அத்தியாவசிய பொருட்கள் வாங்க வந்து செல்லும் பொது மக்களின் வாகனங்களை நிறுத்த சிரமமாக உள்ளது. எனவே, நாளங்காடியில் டிரான்ஸ்பார்ம் அருகில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியான இடத்தில் இருச்சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தால் பொது மக்களின் பயன்பாட்டிற்கும், போக்குவரத்து இடைஞ்சல் இல்லாமல் இருக்கும். மேலும் இதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டுக்கு தோராயமாக ரூ.20,00,000/- வரை நிரந்தரமாக வருமானம் கிடைக்கும் என்பதாலும் மேற்படி இடத்தில் தனி நபர் ஆக்கிரமிப்பு போன்றவை தடுக்கப்படும் என்பதாலும் மேற்படி இடத்தில் பொது மக்களுக்கு ஏற்ற வகையில் இரு சக்கர வாகன நிறுத்திமிடம் அமைக்க ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1/மன்றம் அங்கீகரிக்கலாம்.

2பணியின் அவசர, அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3மேற்கொள்ளப்படும் செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1/2021/ 193 )

**பொருள் எண் 18**

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 3812/2021/குழு–1 நாள் 27.08.2021இல் நகராட்சிக்கு சொந்தமான அனைத்துக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவது மற்றும் பயனற்ற அனைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளையும் சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் வகையில் இப்பணியினை 15.09.2021ஆம் தேதிக்குள் முடிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சிக்கு சொந்தமான 51 கட்டிடங்களுக்கு புதியதாகவும், பழுதடைந்துள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை முறையாக சரிசெய்து பயன்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,00,000(ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி, புதியதாக மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சரி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1/2191/2021)

**பொருள் எண் 19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 15959/2021/WS–2 நாள் 27.08.2021இல் ஜீவன் மிஷன் (JJM) தொலைநோக்கு திட்டம் 2031இல் Water supply–MoUHA GIS Operational Guideliness for impelementation of JJM (Urban/ AMRUT 2.0) தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி கருத்துரு / பிரேரணைகள் / திட்ட அறிக்கை மதிப்பீடுகள் / வரைபடங்கள் / களஆய்வு / நகராட்சி மற்றும் பிற துறைகளின் நீர் நிலைகளில் உள்ள நீரின் தரச்சான்றுகள் பெறுதல் / புகைப்படங்கள் / புகைப்படங்கள் எடுத்தல் / GPS Etnex 20/ மற்றும் சில அளவுகள் மேற்கொள்ள தேவையான அளவீடு செய்யும் Tape / Road metre தேவைப்படுகிறது.

மேலும் இப்பணியின் முழு கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் வசம் அனுப்பிடவும், தொலைநோக்கு திட்டம் 2031 (Mission 2031)இன்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு தேவையான பிரேரணைகள், திட்ட அறிக்கை, மதிப்பீடுகள், வரைபடங்கள், கள ஆய்வு தொடர்பாக பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவ்வப்போது ஏற்படும் செலவினங்களை பட்டியல் பெற்று தொகையினை வழங்கிடவும், மன்றப் பொருள் ஆணையரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. இப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ 2020 /2021

**பொருள் எண் 20**

இந்நகராட்சிக்குட்பட்ட துருகம் சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் 26261 க.மீ. Legacy waste உள்ளது. இவற்றினை தரம் பிரித்து அகற்றி, இடத்தினை மீளப்பெற SBM திட்டம் 7வது SHPC மூலம் 175.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது. இவற்றில் தற்போதுள்ள Legacy Waste முன் அளவீடு செய்து தெரிவித்த பின்னர், அண்ணா பல்கலை மூலம் தல ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங்க ஏதுவாகவும், பணிகள் துவங்கும் முன்னரே முன் அளவுகள் செய்வதால், Legacy wasteஇன் அளவுகளில் கூடுதல் மற்றும் குறைவுகளை அளவிட முடியும். மேலும் இவ்வளவுகள் மூலம் திட்ட செயல்படுத்த ஏதுவாக அமையும்.

மேற்படி அவசியத்தினை முன்னிட்டு, இப்பணிகளை மேற்கொள்ள தனியார் சர்வேயர்கள் மூலம் மேற்கொள்ள (26261 x 10.00/ M3) ஆகும் செலவினம் ரூ.3,10,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும் அனைத்து வரிகள் உட்பட) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியினை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட சர்வேயருக்கு அளவை பணிக்காகும் செலவினத்தினை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் இ1/ / 2021)**

**பொருள் எண் 21**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019 இன் கீழ் ரூ. 175.00 இலட்சம் மதிப்பீட்டில் உயிரிய செயலாக்கம் முறையில் (Bio Mining) துருகம் சாலையில் உள்ள குப்பை சேகரிக்கும் கிடங்கில் குப்பைகளை பிரித்தெடுத்து இடத்தினை மீளப் பெறப்படும் பணி (26621 க.மீ.)-க்கு, 05.08.2021 ஆம் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் ONLINE / OFFLINE முறையில் கோரியதில், ONLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால், OFFLINE முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | Thiru. P.GOPINATHA REDDY, Bangalore |
| 2. | Thiru. C.PRABHAKARAN, K.K. Dist. |
| 3. | M/s. SS GREEN ENERGY, Salem |
| 4. | M/s. NEPTUNE AUTOMATION, Erode |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. NEPTUNE AUTOMATION, Erode என்ற நிறுவனத்தார் மட்டும் தொழில்நுட்ப தகுதி (Technically Eligible) பூர்த்தி செய்துள்ளதால், அந்நிறுவனத்தின் விலைவிகித உறையினை 19.08.2021 அன்று திறந்து ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மற்றும் விலை குறைப்பு (Negotiation) பெறப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்த விலை விகிதம் | விலைகுறைப்பு செய்து பெறப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **M/s. NEPTUNE AUTOMATION,** RSF No. 83/3, 84/1, A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur Post, Erode | ரூ. 175.00 | ரூ. 1,83,68,490/- +7.98% மதிப்பீட்டைவிட கூடுதல் | ரூ. 1,78,36,070/- +4.85% மதிப்பீட்டைவிட கூடுதல் |

மேற்காணும் திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, மதிப்பீட்டு விலையினைவிட கூடுதலாக **+4.85%-க்கு** விலை விகிதம் (சம்மத கடிதம்) அளித்துள்ள "M/s. NEPTUNE AUTOMATION, Erode" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி "M/s. NEPTUNE AUTOMATION, Erode" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள **+4.85%** மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்தினை (சம்மத கடிதம்) ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2220/2018/இ1)**

பொருள் எண் 22

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 15081/2018/டிபி3 நாள் 18.07.2020இல் அனைத்து நகராட்சி பகுதிகளிலும் பசுமை சூழலை அதிகரிக்கும் வகையில் "மியாவாக்கி" முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நட சட்டமன்ற விதி எண் 110இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வெளியீட்டின்படி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் 1) தச்சூர் கிரீன் சிட்டி, 2) கச்சேரி சாலை விஜபி கார்டன் ஆகிய 2 இடங்களில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு இவ்விரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்விடங்களில் மண் தோண்டி குழிகள் அமைக்கவும் (Tractor or Machine rent) மரங்களை வனவியல் விரிவாக்க மையம் மூலம் ஒரு மரக்கன்று ரூ.20/- வீதம் வாங்கவும், இவைகளை தண்ணீர் வசதி மேற்கொள்ள அருகில் உள்ள தனியார் கிணற்றிலிருந்து குழாய்கள் அமைத்து தண்ணீர் பாய்ச்சி காடுகள் அமைக்க தோராய செலவினம் ரூ1,60,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ /2021

பொருள் எண் 23

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 15959/2021/WS-2 நாள் 27.08.2021இல் ஜீவன் மிஷன் (JJM) தொலைநோக்கு திட்டம் 2031இல் Water supply-MoUHA GIS Operational Guideliness for impelementation of JJM (Urban/ AMRUT 2.0) தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி பணியாளர்களை நியமனம் செய்து கள ஆய்வு மேற்கொள்ள ஏதுவாக படிவங்கள் அச்சடிப்பு, எழுது பொருட்கள் வாங்கியது, மற்றும் இப்பணி தொடர்பான இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும். இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவ்வப்போது ஏற்படும் செலவினங்களை பட்டியல் பெற்று தொகையினை வழங்கிடவும், மன்றப் பொருள் ஆணையரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. இப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்..

ந.க.எண் இ1/ 2020 /2021

பொருள் எண் 24

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தாமன குளக்கரை கடை எண் 19ஐ திரு ஜான்பாஷா என்பவருக்கு 01.06.2015 முதல் 31.05.2018 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இரண்டாம் பருவ காலமான 01.06.2018 முதல் 31.05.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு 15% உயர்வு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டது.

அரசாணையில் தெரிவித்துள்ள விதிமுறைகளை பின்பற்றி 9 ஆண்டுகள் மேற்படி கடையினை குத்தகைதாரர் நடத்திக் கொள்ள தெரிவித்துள்ளதை தொடர்ந்து01.06.2021 முதல் 31.05.2024 வரை (மூன்றாம் பருவ காலம் தொகுப்பு) மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு வாடகைத் தொகையை உயர்த்திபுதுப்பிக்கலாம்

| வ.எ | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்) | கடை எண் | வரிவிதிப்பு எண் | தற்போது உள்ள வாடகை | 15% உயர்வு | 15% உயர்வுக்கு பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜான்பாஷா | 19 | 042/2014009 | 13168 | 1975 | 15143 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி மூன்றாம் தொகுப்பு காலத்திற்கு புதுப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/ /2021

பொருள் எண் 25

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தென்புறமுள்ள 7 கடைகள் கடந்த 2018-2019 முதல் பொது ஏலத்தில் கலந்து கொண்டு கடையினை 10/2018 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. 01.10.2018 முதல் 30.09.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

அரசாணை எண் 92 ந.நி.ம.கு.வ. துறை நாள் 19.07.2007இன்படி மூன்று ஆண்டு குத்தகை காலத்தினை தொடர்ந்து மூன்று தொகுப்பு காலத்திற்கு (9 ஆண்டுகள்) தொடர்ந்து நடத்திக் கொள்ள தெரிவித்துள்ளதை தொடர்ந்து 01.10.2021 முதல் 30.09.2024 வரை இரண்டாம் பருவ காலத்திற்கு ஏற்கனவே உள்ள வாடகை தொகையில் 15% உயர்வு செய்து கீழ்க்கண்டவாறு புதுப்பிக்கலாம்

| வ.எ | குத்தகைதார்ர் பெயர் (திருவாளர்) | கடை எண் | வரிவிதிப்பு எண் | தற்போது உள்ள வாடகை | 15% உயர்வு | 15% உயர்வுக்கு பின்னர் வாடகை தொகை (GST தவிர்த்து) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஏழுமலை த/பெ மாரி | 1 | 042/BD01/00032 | 16200 | 2430 | 18630 |
| 2 | ஷாகுல் ஹமீது | 2 | 042/BD01/00033 | 5850 | 878 | 6728 |
| 3 | ஜே.முஸ்தபா | 3 | 00037 | 5950 | 893 | 6843 |
| 4 | கோவிந்தராஜ் | 4 | 00035 | 5750 | 863 | 6613 |
| 5 | ஸ்ரீபாலாஜி | 5 | 00030 | 5650 | 848 | 6498 |
| 6 | திராவிடமணி | 6 | 00036 | 5650 | 848 | 6498 |
| 7 | ஜி.அண்ணாதுரை | 7 | 00029 | 5600 | 840 | 6440 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இரண்டாம் தொகுப்பு காலத்திற்கு 15% வாடகையினை உயர்வு செய்து புதுப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/ /2021

பொருள் எண் 26

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங் கட்டணம் வசூலிக்கும் உரிமையினை கடந்த 2018–2019இல் பொது ஏலம் விடப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை திரு இ.கண்ணன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி குத்தகை உரிமத்தினை ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து 2019–2020 மற்றும் 2020–2021 ஆண்டு வரை புதுப்பித்து வழங்கப்பட்டது.

மேற்படி குத்தகை உரிமகாலம் 31.03.2021இல் முடிவடைந்துள்ள நிலையில் 26.02.2021இல் சட்டமன்ற பொதுத்தேர்தலை ஒட்டி தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் 01.04.2021 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கான பொது ஏலம் விடஇயலாத நிலை ஏற்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 5304/2021/ஆ2 நாள் 16.03.2021இன்படி வழங்கப்பட்ட தெளிவுரையினை பின்பற்றி தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் பொது ஏலம் கோரவும் ஒப்பந்தப்புள்ளி பெற முடியாத நிலையில் உள்ளதால் பேருந்து நிலைய சுங்க கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் திரு இ.கண்ணன் என்பவர் தொடர்ந்து வசூலித்துக் கொள்ள அனுமதி வேண்டி வரப்பெற்ற கடிதம் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகைதாரர் தொடர்ந்து நடத்திக் கொள்ள கோரவும்,2020–2021ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட கேட்பு தொகையினை வசூலித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் அ1/ /2021

பொருள் எண் 27

**கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவு பணிகளுக்கான இயங்கி வரும் ஜேசிபி வாகனம் தொடர் பணியின் காரணமாக டயர்கள் அனைத்தும் தேய்ந்து போய் உள்ள காரணத்தினால் அடிக்கடி பஞ்சர் ஆகி பணியில் சுணக்கம் ஏற்படுவதாகவும், புதியதாக டயர்கள் வாங்கி பொருத்தினால் வாகனம் தொடர்ந்து இயங்க ஏதுவாக இருக்கும் என ஜேசிபி ஓட்டுநர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதனை ஏற்று ஜேசிபி வாகனத்திற்கு முன்பக்கம் சிறிய அளவிலான டயர்கள் 2ம், பின்பக்கம் பெரிய டயர்கள் 2ம் வாங்கி பொருத்த ஆகும் செலவினம் ரூ.1.10 இலட்சம் மட்டும் (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டும், பொது சுகாதார பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும் ஜேசிபி வாகனத்திற்கு 2 சிறிய, 2 பெரிய அளவிலான டயர்கள் வாங்கி பொருத்திக்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் எச்1 /          /2021**

பொருள் எண் 28

அரசாணை (நிலை எண் 154) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எம்.ஏ. 5, நாள் 09.08.2010ன்படி இந்நகராட்சி முதல்நிலை நகராட்சி என்பதால் இந்நகராட்சி பொறியியல் பிரிவில் 5 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. அதன் விபரம்

1. நகராட்சி பொறியாளர் – 1 எண்ணிக்கை
2. பணி மேற்பார்வையாளர் – 1 எண்ணிக்கை
3. நீர்த்தேக்க தொட்டி காவலர் – 1 எண்ணிக்கை
4. பணி ஆய்வாளர் – 1 எண்ணிக்கை
5. குழாய் ஆய்வாளர் – 1 எண்ணிக்கை

மேலும் இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளவும் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருமின் விளக்குகள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. குடிநீர் பராமரிப்பு பணிகள் விபரம்

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர் இணைப்புகள் | 6790 இணைப்புகள் |
| 2 | பைப்லைன் அமைக்கப்பட்டது | 65.60 கி.மீ நீளம் |
| 3 | கேட் வால்வு திறப்பான் | 200 எண்ணிக்கை |
| 4 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 6 (30.00 இலட்சம் கொள்ளளவு) |
| 5 | மினிபவர் பம்ப் 2000 லி | 283 எண்ணிக்கை |
| 6 | கைப்பம்புகள் | 15 எண்ணிக்கை |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தில் 20 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும், தினக்கூலி விகிதத்தில் ரூ.353/– வீதத்தில் 15 பணியாளர்களுக்கு ஏற்கனவே மன்ற தீர்மான எண் 251/2020 நாள் 31.03.2020ல் 2020–2021 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ.371/–வீதத்தில் 15 பணியாளர்களுக்கு ஏற்கனவே மன்ற தீர்மான எண்354 /2020 நாள் 30.09.2020ல் 01.10.2020 முதல் 31.12.2020 முடிய 3 மாதங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடந்து 01.01.2021 முதல் 31.03.2021 வரை தீர்மான எண் 437 /2020 நாள் 31.12.2020 இன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 01.04.2021 முதல் 30.06.2021 வரை 3 மாதத்திற்கு ஊதியம் வழங்க தீர்மான எண் 87 /2021 நாள் 25.02.2021ல் அனுமதி பெறப்பட்டது

அதனை தொடந்து இந்நகராட்சி மன்ற தீர்மான எண் நாள் 30.06.2021இல் 01.07.2021 முதல் 31.03.2022 வரை 9 மாதங்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியாக பணியாளர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் விலை விகிதத்தில் ஊதியம் வழங்கவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 3445/ 2019 )

பொருள் எண்29

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பணிகள், குடிநீர் விநியோகம் பொது சுகாதாரப் பணிகளில் தமிழன் ஆடவர் குழு மூலம் கடந்த 2018 முதல் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களால் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வரும் நிலையில் இந்நகராட்சி தீர்மான எண் 87/2021 நாள் 25.02.2021இன்படியும், நாள் ஒன்றுக்கு ரூ.371/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு எண் ஐ2/3737/2020 நாள் 04.08.2021இல் நாள் ஒன்றுக்கு ரூ371லிருந்து ரூ.387ஆக உயர்வு செய்து வழங்கப்பட்ட தினக்கூலியினை 01.04.2021 முதல் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் பணிபுரியும் தமிழன் ஆடவர் குழு பணியாளர்களுக்கு ரூ.371இலிருந்து ரூ.387ஆக உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி வழங்கப்பட்டுள்ள ரூ.371இலிருந்து ரூ.387ஆக உயர்த்தி வழங்கவும், 01.04.2021 முதல் நிலுவைத்தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/3445/2019

பொருள் எண் 30

இந்நகர் மன்ற தீர்மான எண்.129 நாள்:-30.06.2021 ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு, 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு ராசி மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து இந்நகராட்சி பகுதியில் கொரோனாவைரஸ் மற்றும் டெங்கு நோய் வெகுவாக பரவி வருவதால் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்து செப்டம்பர் 2021 வரை அனுமதி பெறப்பட்டு இந்நோய் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்தவும், டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பணியினைஆகஸ்ட் 2021 வரை பணியினை செய்து வந்தார்கள்.மேலும், மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்ய இயலாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் M/s.சீத்தா மகளிர் மேம்பாட்டு மன்றம் கள்ளக்குறிச்சி என்ற குழு பணிபுரிய சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட மூலமாகவே தொடர்ந்து 47 பணியாளர்களை செப்டம்பர் 2021 முதல் நவம்பர் 2021 வரை 3 மாதத்திற்கு பணியில் அமர்த்தி கொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.289/-வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி M/s.சீத்தா மகளிர் மேம்பாட்டு மன்றம் கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலம் செப்டம்பர் 2021 மாதம் முதல் நவம்பர் 2021 வரை 3 மாதத்திற்கு பணி புரிய பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

3.மாவட்ட ஆட்சி தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.289/-ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

பொருள் எண் 31

இந்நகர் மன்ற தீர்மான எண்.89 நாள் 31.05.2021ல் இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வருவதை கட்டுப்படுத்த கிருமி நாசினிகள் தெளிக்கும் பணியாளர்கள் இந்நகராட்சியில் போதிய அளவு பணியாளர்கள் இல்லை என்பதால் தேவைகேற்ப கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிக்கு தற்காலிக பணியாளர்களை நியமித்து பாதுகாப்புடன் பணிகள் மேற்கொள்ள 20 நபர்களை தற்காலிகமாக ராசி மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக தேர்ந்தெடுத்து கடந்தஜீன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரை அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரையில் செப்டம்பர் 2021 முதல் பள்ளிகள் திறக்கப்படுவதால் பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளில் தினசரி தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்க வேண்டும் எனவும், கொரோனா வைரஸ் மேலும் பரவாமலிருக்க பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், கொரோனா தொற்று ஏற்பட்ட வீடுகளிலும் தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். மேலும், ஏற்கனவே பணிபுரிந்து வந்த ராசி மகளிர் சுய உதவி குழு கள்ளக்குறிச்சி என்ற குழுவின் பணிக்காலம் முடிவுற்றது மேலும் தொடர்ந்து அவர்களால் பணிசெய்ய இயலாது என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் M/s. சீத்தா மகளிர் மேம்பாட்டு மன்றம் கள்ளக்குறிச்சி என்ற குழு மேற்கண்ட பணிக்கு செய்யசம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்டபணிக்குசெப்டம்பர் 2021 முதல் டிசம்பர் 2021 வரைஆகிய 4 மாதங்களுக்குM/s. சீத்தாமகளிர் மேம்பாட்டுமன்றம் கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாகவே பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு பணியாளர்களை தொடர்ந்து 4 மாதங்களுக்கு பணியில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசரஅவசியம் கருதிமேற்கண்டபணிக்குM/s. சீத்தாமகளிர் மேம்பாட்டுமன்றம் கள்ளக்குறிச்சி என்றகுழுவின் மூலமாகவேசெப்டம்பர் 2021 முதல் டிசம்பர் 2021 ஆகிய 4 மாதங்களுக்குபணிகள் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய்நிதியிலிருந்துவழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733 /2020 /29/எச்1)**

பொருள் எண் 32

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் அனைத்து வார்டு பகுதியிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒட்டு மொத்த துப்புரவு பணி மேற்கொள்ளவும், மேலும் கொசுவினால் பரவும் நோய்களான டெங்கு, சிக்கன்குனியா மற்றும் பன்றிக்காய்ச்சல் வெகுவாக பரவிவருவதாலும், நகரப்பகுதியில் கொரோனா தொற்றுநோய்களை தடுக்கும் பொருட்டும் தேவையான கிருமிநாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு தூள், பிளிச்சிங் பவுடர் மற்றும் பினாயில் ஆகியவைகளை கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இந்நகராட்சி பகுதியில் மேற்கண்ட பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினிகள் போதிய அளவு இருப்பில் இல்லை. எனவே, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். / 2021 /எச்1)

**பொருள் எண் 33**

**நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி நகரில் நகர்ப்புற வாழ்வாதார மையம் அமைத்திட மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 218/2018/NULM–1 நாள் 18.09.2020இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், கள்ளக்குறிச்சி நகரின் மையப்பகுதியில் பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் 1000 ச.அடி அளவிலான ஒரு இடம் தேர்வு செய்து அக்கட்டிடத்தில் நகர்ப்புற வாழ்வாதார மையம் அமைத்திட தெரிவிக்கப்பட்டு திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண் அ6/15/2020 நாள் .2021இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பூச்சந்தை வளாகத்தில் காலியாக உள்ள கடையினை ஒதுக்கீடு செய்து தரக்கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது**

**அலுவலகக் குறிப்பு**

1. **கடிதம் பார்வையிடப்பட்டது.**
2. **நகராட்சிக்கு சொந்தமான கடையில் 1000 ச.அடி அளவு கொண்ட கடைகள் ஏதும் இல்லை. சேலம் நெடுஞ்சாலையில் உள்ள குளக்கரை கடை வணிக வளாகத்தில் பின்புறம் மூன்று கடைகள் உள்ளது. இக்கடைகள் இவ்விடத்தில் கடை வைத்துக் கொள்ள விருப்பம் இருப்பின் அதில்பொது சேவை மையம் செயல்பட மன்றம் அனுமதிக்கலாம்.**
3. **பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு அதற்கான வாடகையினை நிர்ணயம் செய்யலாம்.**

**ந.க.எண் இ1/ /2021**

பொருள் எண் 34

கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுக்கும்பொருட்டு நகராட்சி பகுதியில் அவ்வப்போது பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தடிஜிட்டல் பேனர் அச்சடித்து வழங்கும் பணிக்கு பொது சுகாதார பணிகள் அவசர, அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 22.04.2021 அன்று கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு

| வ.எ | அளவு | எண்கள் | திரு எஸ்.மதியழகன், ஸ்ரீதிருமகள் டிஜிட்டல் பிரிண்டர்ஸ், கள்ளக்குறிச்சி | திரு ஆர்.மணிகண்டன் ஒலிம்பிக் டிஜிட்டல், கள்ளக்குறிச்சி | ஸ்ரீவிநாயகா டிஜிட்டல்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|---|
| 1 | 10x8 | 1 No's | 1200 | 1300 | 1250 |
| 2 | 10x6 | 1 No's | 1050 | 1150 | 1100 |
| 3 | 6x4 | 1 No's | 650 | 675 | 700 |
| 4 | 6x3 | 1 No's | 600 | 625 | 650 |
| 5 | 4x4 | 1 No's | 550 | 600 | 580 |
| 6 | 4x3 | 1 No's | 475 | 500 | 550 |
| 7 | 2x2 | 1 No's | 300 | 325 | 350 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் அனைத்து இனங்களுக்கும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.மதியழகன், கள்ளக்குறிச்சி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்

b) ஆட்டோ விளம்பரம்

| வ.எ | ராஜதுரை சுபஸ்ரீ ஆட்டோ, கல்லை (நாள் ஒன்றுக்கு) | முகமது உசேன் ரங்கீலா ஆட்டோ கள்ளக்குறிச்சி (நாள் ஒன்றுக்கு) | சேக் காதர் RBM ஆட்டோ கள்ளக்குறிச்சி (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | 3000 | 2900 | 2950 |

c) துண்டு பிரசுரங்கள் அச்சடித்தல் பணி

| வ.எ | அளவு | எண்கள் | திரு எஸ்.மதியழகன், ஸ்ரீதிருமகள் டிஜிட்டல் பிரிண்டர்ஸ், கள்ளக்குறிச்சி | திரு ஆர்.மணிகண்டன் ஒலிம்பிக் டிஜிட்டல், கள்ளக்குறிச்சி | ஸ்ரீவிநாயகா டிஜிட்டல்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|---|
| 1 | A4 Size | 1000 | 850 | 900 | 875 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் எச்1/ 733 / 2020

**ஆணையாளர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**